# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.108/2019

பி.வா.சா.1– முதல் விசாரணை தொடர்ச்சி– நாள் 06–02–2026.

பெயர் = சுப்பாராஜ் பி.வா.சா.–1

பி.வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் முதல்விசாரணை தொடர்ச்சி–

இந்த வழக்கில் நான் ஏற்கனவே நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து முதல் நிலை சாட்சியம் அளித்துள்ளேன். கூடுதல் நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். கீழ்க்கண்ட ஆவணங்களை பிரதிவாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

(1) 23.09.1927ம் தேதிய பந்தல்குடி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.1444/1927 என்ற அடமான ஆவணம் சார்பதிவாளர் அலுவலக நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(2) 21.08.1929ம் தேதிய பந்தல்குடி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.938/1929 என்ற கிரைய ஆவணம் உண்மை நகல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(3) 12.09.1942ம் தேதிய பந்தல்குடி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 1922/1942 என்ற கிரைய ஆவணம் உண்மை நகல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(4) 04.05.1945ம் தேதிய பந்தல்குடி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 370/1945 என்ற கிரைய ஆவணம் உண்மை நகல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(5) 29.01.1997ம் தேதிய பந்தல்குடி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 6/1997 என்ற உயில் ஆவணம் அசல் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(6) புல எண்.1309 ற்கான புல வரைபடம் உண்மை நகல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.02.06 15:40:00 +0530